# மாவீரர் நாள் கையேடு



- வீரர் பணிமனை

தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழம்

# மாவீரர் நினைவாக

## அனுஷ்டிக்கப்படும் நாட்கள்

| | | |
|---|---|---|
| 01) | அன்னை பூபதி அம்மா நினைவு நாள், மார்ச் மாதம் 19ந் திகதி தொடக்கம், ஏப்ரல் மாதம் 19ம் திகதி வரை. | 19-03-1988 — 19-04-1988 |
| 02) | கரும்புலிகள் தினம் | 05-07-1987. |
| 03) | தியாகதீபம் திலீபன் நினைவு நாள் செப்டம்பர் 15 ந் திகதி தொடக்கம், செப்டம்பர் 26 ந் திகதி வரை. | 15-09-1987 — 26-09-1987 |
| 04) | குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் சயனைட் அருந்திய நாள். ஒக்டோபர் மாதம் 5 ந் திகதி. | 05-10-1987. |
| 05) | மாவீரர் நாள். நவம்பர் மாதம் 21 ந் திகதி தொடக்கம், நவம்பர் மாதம் 27 ந் திகதி வரை. | 27-11-1982 |

தமிழீழ தேசியத் தலைவரின் செய்தியிலிருந்து

# இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள், (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக்கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சிய வாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிகமுக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்வுக்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈய்ந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவுநாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சியதாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகவும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம்மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக, என்றும் இருக்கும். மாவீரர்களின்து இத்தகைய நினைவு கூரல் என்பது, ஒரு சம்பவமாக இருந்துவிடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டிற்குரியவையாகவும் வளர்ந்து வர வேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும் நிலை நாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புகளை வேண்டி நிற்கிறோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

நன்றி!

பொறுப்பாளர்
தமிழீழ மாவீரர் பணிமனை,
தமிழீழம்.

## மாவீரர்.

தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்த்தும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈய்ந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழீழ மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய வேதங்களாய்
ஈழமண்ணில் புது விதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே.
மாவீரராவார்:

## ஏன் இவர்கள் மாவீரர்கள்.

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள்.
தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள்.
உணர்வுத்தீக்களை தமக்குள்ளே சிறை போட்டவர்கள்.
தேச மக்களின் பாசப் பிணைப்புகளுக்காக
தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள்.
பள்ளிப்பராயத்தை பள்ளித்தோழருக்காய்
பறிகொடுத்தவர்கள்.
ஊரெல்லாம் உறங்கும் வேளை உறக்கமின்றி விழித்தவர்கள்.
எல்லை சுற்றி வேலிச்சிலையாய் நின்றவர்கள்.
தமது மக்களுக்காய் கால்களை, கரங்களை
இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் (நவம்பர் 27)

தேச விடுதலைக்காக மரணித்த
மாவீரர்களுக்கு
தமிழீழ மண்ணில்
மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று.
இவ் எழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய

நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
விடுதலைப் புலி வீரர்களில்
முதலாவதாக வீரச்சாவெய்திய
மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்) நினைவுநாளை
நவம்பர் 27ஐ
தமிழீழ தேசம்
மாவீரர் நாளாகப் பிரகடனம் செய்துள்ளது.
வருடம் தோறும்
இப் புனித நாளினை
தமிழினம்
உணர்வு பூர்வமாகக் கொண்டாடுகிறது.
நினைவு கூருகிறது.

## மாவீரர் நாளை எதிர் கொள்ளுதல்.

மாவீரர் நாளானது மாவீரர் வாரமாக
தமிழீழமெங்கும் கொண்டாடப்படுகிறது.
எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது
நவம்பர் 21ல் தொடங்கி
நவம்பர் 27ல்- முடிவடைகின்றது.
இம் மாவீரர் வாரத்தினைக்
கொண்டாடும் முகமாக
நவம்பர்
21ம் நாளுக்கு முன்னதாகவே
தமிழீழமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது.
மாவீரர் துாபிகள், நிழற்படங்கள் அமைந்த இடங்கள்,
இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள்,
கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள்
அனைத்தையுமே மக்கள் அனைவரும்
தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கி விடுகின்றனர்.
இவையாவும் மாவீரர் நினைவாக
அலங்கரிக்கப்பட்டு
தமிழீழ நாடு புதுப் பொலிவுடன் விளங்கும்.

## மாவீரர் வாரம் 21 - 27.

ஆரம்ப நாள் காலை 9.00 மணிக்கு
தேசியக்கொடி ஏற்றத்தைத் தொடர்ந்து
மாவீரர் வார கொண்டாட்டம் ஆரம்பமாகும்
தமிழீழம் முழுவதும் எழுச்சிக் கோலம் பூண்டு
பொலிவுடன் விளங்கும்.
அனைத்துத் தமிழ் மக்களும் அலங்கரிப்பு நிகழ்ச்சியிலும்,

அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள்.
வேறு களியாட்டங்கள், கொண்டாட்டங்கள்
நடைபெறமாட்டாது.
தேவையற்ற கேளிக்கைகள், வேண்டத்தகாத
சூழ்நிலைகள் மறைந்துவிடும்.
மதுச்சாலைகள் மூடப்பட்டு மது
பாவிப்பதை நிறுத்தி விடுவார்கள்.
வீடுகள் தோறும் விடுதலைக் கீதங்கள் ஒலிக்கும்.
மக்கள் பிரிவு பிரிவாக, அமைப்புக்கள் ரீதியாக
ஆக்க பூர்வ வேலைத் திட்டங்களிலும்
மற்றும் மாவீரர் நாள்
நிகழ்வுகளிலும்
கலந்து கொள்வர்.

## மாவீரர் வாரத்தில் 21 - 26 வரை.

தேசியக்கொடியேற்றி மாவீரர் வார விழாவை ஆரம்பித்தல்.
வீதிகள் அலங்கரித்துப் பந்தல்கள் அமைப்பது
மாவீரர் நினைவுக் கூட்டங்கள் வைத்தல்
பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகள்
மாவீரரின் பெற்றோரைக் கௌரவித்தல்
சமூக சேவைகள், சிரமதானங்கள் செய்தல்.
நூல் வெளியீடுகள் செய்தல் (மாவீரர் நினைவாக
சமூகம் சார்பாக போராட்டம் சார்பாக)
பொது அறிவுப் போட்டிகளின் பரிசு வழங்கல்
என்பன போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை மக்கள் அனைவரும்
பங்கேற்றுச் செய்வதனை தேசிய கடமையாக
உணர்ந்து கொள்வார்கள்

## பாடசாலைகள்.

ஆசிரியர்கள் மாவீரரின் மாண்பினையும்
மாவீரர் நாளின் மகிமையையும்
மாணவர்களுக்கு முன்கூட்டியே
தெளிவினை ஏற்படுத்துவார்கள்.
பாடசாலைகள் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
நவம்பர் 21ம் நாள் காலை 9.00 மணிக்கு
தேசியக்கொடி ஏற்றலும்,
பாடசாலைகளில் அஞ்சலிக் கூட்டங்கள்,
கலை நிகழ்ச்சிகள், நடைபெறும்
மாவீரர் நினைவாக சமூகசேவைகளிலும் ஈடுபடுவர்

மாவீரருக்கு மலர் அஞ்சலி செலுத்தும் பணியினை மாணவர்கள் பெருவிருப்பு ன் செய்வார்கள்.
இந்தத் தேசிய விழாவில் ஆசிரியர்களும், மாணவர்களும், பொது மக்களும், பொது ஸ்தாபனங்களும்,
முழுமையாக இணைவதில்
தேசியப்பற்று உரமேற்றப்படுகிறது.

## மாவீரர் நாள் கொண்டாட்டம் நவம்பர் 27.

26, 27ம் திகதிகளில் தமிழீழ மக்கள் அனைவரும்
தமது வேறு பணிகளை விடுத்து
மாவீரர் புனித நாளினை எதிர் கொள்வார்கள்.
26 நள்ளிரவு 12.00 மணி தாண்டும் போது
மாவீரர் நாள் உதயமாகின்றது.
இந்த உதய காலமானது
மிகவும் உணர்ச்சி பூர்வமானது.
நாடு முழுவதிலுமுள்ள ஆலயங்கள், தேவாலயங்கள்
அனைத்தும் இந்த நேரத்தில் நினைவொலி எழுப்ப
மாவீரர் சுடரேற்றும் வைபவம் நிகழும்.
நினைவொலி எழுப்பப்படும் நேரத்தில்
மக்களனைவரும் எழுந்து நின்று
இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்வார்கள்.

## நினைவொலி எழுப்பலும், சுடரேற்றலும்.

26 ம் திகதி நள்ளிரவு தாண்டும் நேரத்தை தமிழீழ மக்களனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். 12மணி01 செக்கனுக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் இரண்டு நிமிடங்கள் ஒலி எழுப்பும். இந்த நேரத்தில் எல்லா மக்களும் மௌனமாக அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த நினைவு ஒலி எழுப்பப்படும் போது நினைவொலிக்காக விழித்திருந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவது அனைத்து மக்களினதும் கடமையாகும். நினைவு ஒலி எழுப்பப் படும் போது வீதியால் பயணம் செய்பவர்கள், நடந்தாயினும் வாகனத்திலாவது போனால் உடன் நின்று இந்த இரண்டு நிமிடங்களும் அந்தந்த இடங்களிலேயே மௌன அஞ்சலி செய்தல் வேண்டும்.

யாழ் பிராந்தியம் தவிர்ந்த மற்றைய பிராந்தியங்களில் சரியாக 12மணி 2நிமிடமாகும் போது ஒவ்வொரு பிரதேசத்தி

லுமுள்ள மத்திய இடத்திலும், யாழ் பிராந்தியத்தில் மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் சுடரேற்றும் வைபவம் இடம் பெறும். ஒவ்வொரு மாவட்டத்திலும் வீரச்சாவெய்திய மாவீரர்கள் அனைவருக்குமான சுடரேற்றும் பந்தங்கள் மைதானத்தில் நாட்டப்பட்டிருக்கும்.

மைதான நடுவில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப் பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வுக் கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திட தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவார்கள். சமகாலத்தில் ஒவ்வொரு இல்லங்களின் வாசலிலும் மாவீரர் சுடரொளியை மக்கள் அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்களும் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப் பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்களின் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடர் ஏற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்படவேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழீழம் எங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் எங்கும் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக் கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் எரியும். பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவு கூர வேண்டும்.

இந்தச் சுடரேற்றும் வைபவமானது,
விடுதலைப் பாதைக்கு
உறுதியையும், உணர்வையும்
கொடுத்து நிற்கின்றது.

## தேசியக்கொடி இறக்கல்.

ஏற்றப்பட்ட சகல தேசியக்கொடிகளும் 27ம் திகதி மாலை 5.00 மணிக்கு நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்னர் இறக்கப்படல் வேண்டும். குறித்த நேரத்திற்குப் பின்னரும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுமாயின் அந்நிகழ்ச்சிகள் முடிவுற்றபின்னரே தேசியக்கொடி இறக்கப்படல் வேண்டும்.

## தேசியக் கொடி.

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டு மொத்தமான பொதுச்சின்னமாக தேசியக் கொடி விளங்குகிறது. ஒவ்வொரு நாட்டின் இயல்புகள் நிலைமைகள், எண்ணங்களின் வெளிப்பாடாக அவ்வவ்நாட்டு தேசியக் கொடிகளின் சின்னம், நிறம், அளவு என்பன வேறுபட்டிருக்கும். தேசியக்கொடியின் அளவு பெரும்பாலும் 3 : 2 என்ற அளவினதாகவே இருக்கின்றது. சில நாடுகளின் தேசியக்கொடிகள் 2 : 1, 1 : 1 என்ற அளவினைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

நாட்டைப் போற்றி வணங்குதற்கூடாக தேசியக்கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. தேசியக்கொடியை வணங்குவது நாட்டை வணங்குவது போலாகும்.

நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பனவற்றைவிடவும் உயர்ந்ததாக தேசியக்கொடி மதிக்கப்படுகிறது. எனவேதான் ஒரு நாட்டின் எந்தவொரு சிறப்பு நிகழ்வுகளின் போதும் நாட்டின் தலைவர், படை, அரசுப்பணியாளர் அனைவரும் தேசியக்கொடி வணக்கம் செய்கின்றனர்.

தேசியக்கொடிக்கு வழங்கப்படும் மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போல். தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவே தான் தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெரும் குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்துக்கு மிகுதியான ஒறுப்பு ( தண்டனை ) வழங்கப்படுகிறது.

தேசியக்கொடிக்கு செலுத்துகின்ற கொடி வணக்கம் நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. கொடியேற்றம், கொடிவணக்கம் என்பவற்றுக்கான ஒழுங்குமுறை, நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமைந்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறையை மீறுவதும் தேசியக் கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின் போது தேசியக் கொடியை ஏந்திச் செல்வதும், ஏந்தி நிற்பதும்கூட கொடிக்கு செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக்கொடியேற்றுபவர்களும், கொடிக்கம்பத்தை காப்பவர்களும், தேசியக்கொடி சிதையவோ கொடிக்கம்பம் சரியவோ இடமளிக்க மாட்டார்கள்.

கொடியேற்றுபவர்கள் தேசியக்கொடியேற்ற நிகழ்வின்போது உயிர்போகின்ற நிலைவரினினும் கொடியைக் கைவிடாத் தன்மையைக் கொண்டிருப்பர். தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ, கீழே விழுந்தாலோ அது தமது நாட்டுக்கு இழுக்காக, தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாகக் கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடம் இருக்கும்.

தலைவர்கள், சிறப்புக்குடிமக்கள் போன்றோரின் மறைவை யொட்டி ஏற்படும் நாட்டின் துயர நிகழ்வுகளின் போது தேசியக்கொடி கொடிக்கம்பத்தின் உச்சிவரை ஏற்றப்பட்டு கொடிக்கம்பத்தின் நடுப்பகுதிவரை இறக்கிக்கட்டிப் பறக்க விடப் படுவது வழக்கம். இதன் மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப் படுகின்றது.

கொடிக்கம்பத்தின் நுனியிலே பறக்கின்ற கொடி நடுக்கம்பம் வரை இறக்கப்பட்டு அரைக்கம்பத்தில் பறப்பதே நாட்டின் மிகு துயரை உணர்த்துவதாயின் தேசியக்கொடி சிதைவுறுவதோ, இழிவுபடுத்தப்படுவதோ, கீழே வீழ்த்தப்படுவதோ, வீசப்படுவதோ, கால்களில் மிதிபடுவதோ, எண்ணிக்கூடப்பார்க்க முடியாத நிலையாகும்.

## தமிழீழ தேசியக்கொடி.

1977-ஆம் ஆண்டுமுதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவரும் புலிக்கொடியில் உள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக் கொடியாக 1990ஆம் ஆண்டு மாவீரர் நாளிலிருந்து (27-11-1990) அறிவிக்கப்பட்டு அன்றுமுதல் தமிழீழத்தில் தேசியக் கொடியாக இருந்துவருகிறது.

எமது தேசியக்கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள் தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை, தமிழீழமக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்கு தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டாற்போல நாம் முழுமையாக விடுதலை பெற்றதாகக்

கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். வர்க்கசாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும் பெண் அடிமைத்தனம் நீக்கப்படவேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். சமத்துவமும் சமதர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்படவேண்டும். இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது.

விடுதலைப் பாதை கரடுமுரடானது. சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்கமுடியாத நம்பிக்கை வண்டும். என்றும் தளராத உறுதி வேண்டும் என்பதை கறுப்பு நிறம் குறித்துக் காட்டுகிறது.

## கொடிவணக்க ஒழுங்குமுறை.

தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பத்தில் உயரம் 22'க்கு குறைவாக இருக்கக் கூடாது.

- ☐ தேசியக்கொடியின் அளவு $4\frac{1}{2}'$ : 3' அளவாக இருத்தல் வேண்டும்.
- ☐ தேசியக்கொடியுடன் வேறு வேறு கொடிகளும் ஏற்றப்படின் அக்கொடிகள் தேசியக் கொடியைவிடப் பெரிதாக இருக்கக் கூடாது.
- ☐ தேசியக்கொடியேற்றப்பட்ட கொடிக்கம்பத்தைவிட ஏனைய கொடிக்கம்பங்கள் 2' உயரம் குறைந்ததாக இருக்கவேண்டும்.
- ☐ தேசியக்கொடியுடன் பிறநாடுகளின் தேசியக்கொடிகள் ஏற்றப் படுவதாயின் ஒரே அளவு உயரமுள்ள கொடிக்கம்பத்தில் ஒரே அளவாக கொடிகளை ஏற்றலாம். ஆனால் எமது தேசியக்கொடிக்கு இடப்புறமாகவே ஏனைய நாட்டின் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும்.
- ☐ எமது தேசியக்கொடியுடன் பிறநாட்டுத் தேசியக்கொடிகளை ஏற்றுவதாயின் எமது தேசியக்கொடி ஏற்றப்பட்டதன் பின்பே ஏனைய தேசியக்கொடிகள் ஏற்றப்படவேண்டும்.
- ☐ கொடிகள் இறக்கப்படும்போது ஏனைய கொடிகள் இறக்கப்பட வேண்டும். பின்பு இறுதியாகவே எமது தேசியக்கொடி

இறக்கப்பட வேண்டும். ஏனைய கொடிகள் பறந்து கொண்டிருக்கும் போது எமது தேசியக்கொடியை ஒருபோதும் இறக்கக்கூடாது.

- ☐ ஊர்வலங்களில் தேசியக்கொடியை எடுத்துச் செல்வதாயின் கொடியின் உயரத்தின் 4 பங்கு உயரமான கம்பத்தில் கட்டி நெஞ்சுக்கு நேராகவோ அன்றி வலத்தோளிலோ ஏந்திச் செல்ல வேண்டும். தேசியக்கொடி ஏந்திச்செல்பவருக்கு முன் பாக வேறு எந்தக் கொடியை ஏந்துபவரும் முந்திச் செல்லக்கூடாது.
- ☐ கூட்ட மேடைகளில் பேச்சாளரின் தலைக்கு மேலாக பின் புறத்தட்டியில் தேசியக் கொடியைக் கட்டலாம்.
- ☐ தேசியக் கொடியில் எதுவும் எழுதப்பட்டிருக்கக் கூடாது.
- ☐ தேசியக்கொடி கிழிந்தோ, சிதைந்தோ போனால் அதைப் பழந்துணியாகப் பயன்படுத்தவோ; குப்பைத்தொட்டியில் வீசவோ கூடாது.
- ☐ தேசியக் கொடியை வணிக விளம்பரத்துக்கோ, விரிப்பாகவோ, அன்றி வேறெந்தத் தேவைகளுக்காகவோ பயன் படுத்தக்கூடாது.
- ☐ குறிப்பிட்ட சில உயர் அரச பணியகக் கட்டிடங்களில் மட்டும் தேசியக்கொடி கொடிக்கம்பத்தில் ஏற்றப்படலாம்.
- ☐ கட்டிடங்களில் கொடிக்கம்பத்தில் ஏற்றப்படும் தேசியக் கொடி நாள்தோறும் கதிரவன் எழுந்ததற்குப் பின்னர் ஏற்றப்பட்டு மறைவதற்கு முன்பாக இறக்கப்பட வேண்டும்.
- ☐ ஆட்சிப் பொறுப்பிலுள்ளோர், தலைவர்கள், உயர் அலுவலர்கள், வீடுகளிலும் எந்நாளும் பகலில் தேசியக்கொடி பறக்கவிடப்படலாம்.
- ☐ நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளில் குறிப்பிட்ட சில பொது இடங்களிலும், தேசியக்கொடி நாள்தோறும் பறக்கவிடப் படலாம்.
- ☐ வெளிநாடுகளிலுள்ள எமது பணியகங்களிலும், தூதரகங்களிலும் பகலில் எந்நாளும் எமது தேசியக்கொடி பறக்கவிடப் படலாம்.
- ☐ குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் பொதுமக்கள் வீடுகளில், கட்டிடங்களில், தேசியக்கொடி பறக்கவிடப்படலாம். இவை முறையாக கம்பங்களில் மட்டுமே ஏற்றப்படவேண்டும்.

- தெருவுக்குக் குறுக்காகவோ பக்கமாகவோ கயிறுகளில் தேசியக்கொடி தொங்கவிடப்படக்கூடாது.

- தேசியக்கொடியை தலைகீழாகப் பறக்கவிடக்கூடாது. தேசியக்கொடியிலுள்ள புலி, கொடிக்கம்பத்தைப் பார்த்தவாறு பறக்க விடக்கூடாது. புலியின் பார்வை கொடிக்கம்பத்துக்கு எதிர்ப்புறமாக கொடி பறக்கும் பக்கமாக இருக்கும் வகையில் கொடி பறக்க விடப்படவேண்டும்.

- தேசியக்கொடியை கீழிருந்து பறந்தபடியிருக்கும் நிலையிலேயே ஏற்றவேண்டும். மடித்தபடி மேலே ஏற்றி அங்கிருந்து விரிந்து பறக்கும் வகையில் தேசியக் கொடியை ஏற்றுதல் கூடாது.

- தேசியக்கொடியை ஏற்றுபவர் கொடி வணக்கம் செலுத்த அணிவகுத்து நிற்கும் மக்களுக்கும், கொடிக்கம்பத்துக்கும் இடையில் நின்று கொடியை ஏற்றுதல்கூடாது.

- தேசியக்கொடியை ஏற்றும்போது அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்த வேண்டும்.

- தேசியக்கொடி ஏற்றப்படுவதுபோல, இறக்கப்படுவதும் ஒழுங்கு முறையிலான சிறப்பு நிகழ்வாகவே இருக்கவேண்டும். கொடியை இறக்குபவரும் முதன்மையானவராக, தகுதியானவராக இருத்தல் வேண்டும்.

- தேசியக்கொடி இறக்கப்படும் பொழுது நிலத்தில்விழாது எட்டக்கூடிய உயரத்திலேயே வைத்து கைகளில் ஏந்தி எடுத்தல் வேண்டும்.

- தேசியக்கொடி இறக்கும் நிகழ்வின்போது கையொலி எழுப்பக்கூடாது. அந்நிகழ்வு அமைதியாக நடைபெறவேண்டும்.

- தேசியக்கொடி பொதுவாக மாலை 6.0ப மணிக்கு முன்னர் முறைப்படி இறக்கப்பட வேண்டும். கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் மாலை 6 00 மணிக்கு பின்னரும் தொடருமாயின் நிகழ்ச்சி முடிவுற்றதும் கொடியை முறைப்படி இறக்கலாம்.

- கொடியேற்றித் தொடங்கப்படும் நிகழ்ச்சி நாட்கணக்கில் தொடருமாயின் அந்த நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை தேசியக்கொடி இரவும் தொடர்ச்சியாகப் பறக்க விடப்படலாம். நிகழ்ச்சிகள் முடிவடைந்தபின் முறைப்படி தேசியக்கொடி இறக்க வேண்டும்.

# பொதுவான செயற்பாடுகள்.

## 01) கொடியேற்றம்.

அ) கொடியேற்ற வைபவம் 21. 11. 1992 காலை 9.00 மணிக்கு, சகல பாடசாலைகளிலும், சகல திணைக்கள தலைமையகங்களிலும், அரச செயலகத்திலும், உப அரச அதிபர் செயலகங்களிலும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகங்களிலும், தெங்கு பனம் பொருள் சங்க தலைமையகங்களிலும், சனசமூக நிலையங்களிலும் நடைபெறவேண்டும்.

ஆ) பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், உதவி அரச அதிபர்கள், அரச அதிபர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் கொடிகளை ஏற்றிவைப்பர்.

இ) பிரதான கொடியேற்றும் வைபவம் பாடசாலைகளை மையமாகக் கொண்டு நடைபெறும். இக் கொடியேற்ற வைபவத்திற்கு பாடசாலையைச் சூழ உள்ள பொது மக்கள், பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்த யாவரும் கலந்து கொள்ள வேண்டும்.

ஈ) கொடியேற்றத்தைத் தொடர்ந்து மௌனாஞ்சலி, மலராஞ்சலிக்குப் பின்னர் பாடசாலைகளில் காலை ..00 மணி தொடக்கம் 10.00 மணிவரையும் மாவீரர் தின நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும். இந்நேரத்தில், மாவீரர் நினைவுப் பேச்சு, 30 நிமிடங்களுக்கு கலை நிகழ்ச்சிகள் என இடம்பெறலாம். இந்நிகழ்ச்சிகள் யாவும் ஒரு மணித்தியாலம் மட்டுமே உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

உ) 22. 11. 992 அன்று ஆசிரியர்கள், மாணவர்கள், அப் பாடசாலைகளைச் சூழ உள்ள பொதுமக்கள் ஆகியோரால் சிரமதான நிகழ்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஊ) பாடசாலையில் கல்வி கற்று மாவீரர்களானவர்களின் படங்களை பாடசாலைகளில் வைத்துக் கௌரவிக்கப் படல் வேண்டும்.

எ) பாடசாலை மாணவ, மாணவிகள், மாணவர் இயக்கம், மகளிர் அமைப்பு ஆகியோர் நடாத்தும் நிகழ்ச்சிகளுடன், அரசியற் பொறுப்பாளரும் இணைந்து பொதுமக்களின் அல்லது பொது ஸ்தாபனத்தின் கலைநிகழ்வை ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் நடாத்த வேண்டும்.

## 02) வளைவுகள்.

ஒரு வட்டவைக்கு ஆகக் கூடிய வளைவுகளின் எண்ணிக்கை பத்தாக (10) இருக்க வேண்டும். இவற்றுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் என்பவற்றின் மூலமாகவும் மூன்று (03) வளைவுகள் கட்டப்படல் வேண்டும். இவ்வளைவுகளின் உயரம் 21 அடி உடையதாக இருத்தல் வேண்டும். மிகவும் நேர்த்தியாகவும், அலங்காரமாகவும் இருத்தல் வேண்டும். (மக்கள் தொகைக்கும், வசதிக்கும் ஏற்ப வளைவுகள் அமைக்கலாம்)

## 03) பந்தல்கள்.

ஒரு வட்டவைக்கு ஒரு (01) பந்தல் என்ற ரீதியில் அமைக்கப்படல் வேண்டும். இப் பந்தல் 80 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும். இவற்றில் மாவீரர்களின் படங்கள் யாவும் ஒழுங்கு முறையாக வைக்கப்படல் வேண்டும். மாவீரர்களின் படங்கள் நிலத்திலிருந்து 4' உயரத்துக்கு குறைவாக வைக்கப்படக்கூடாது. இப்பந்தல் அமையும் இடங்கள் பொதுமக்கள் எல்லோரும் வந்து கூடக்கூடியதான ஒரு இடத்தில் அமைக்கப்படல் வேண்டும். கண்டிப்பாக தெருக்களின் குறுக்காகப் பந்தல்கள் அமைக்கக்கூடாது.

## 04) வீதிச் சோடனைகளும், பதாதைகளும்.

இவ்விடயங்கள் மாவட்டப் பொறுப்பாளர்களால் மேற்கொள்ளப்படவேண்டும். சுலோகங்கள், பதாதைகளுக்குரிய வசனங்களை பணிமனை மூலம் பெறல் வேண்டும்.

## 05) பெற்றோர் கௌரவிப்பு.

ஒவ்வொரு பிரிவு ரீதியாக இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவ்விடங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டு உணவு, இடைநேர தேனீர், சிற்றுண்டிகள், இராப்போசனம் வழங்கப்பட வேண்டும். பிற்பகலில் பெற்றோர்கள் நன்றானமுறையில் கௌரவிக்கப்பட்டபின் கலைநிகழ்வுகள் இடம்பெறவேண்டும். பின்னர் அஞ்சலி கீதமாக (30 நிமிடம்) ஒருவர் இசைக்க, பெற்றோர்கள்சேர்ந்து இசைக்க வேண்டும். அதன் பின்னர் மாவீரர் சுடரேற்றத்துக்காக பெற்றோர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்து வரப்பட்டு நள்ளிரவு 12 மணி 01 செக்கன் தொடக்கம் 12.02 நிமிடம் வரை மணி ஒலிக்க சமகாலத்தில் அனைத்து மக்களும் மௌனாஞ்சலி செலுத்தி 12.02 நிமிடத்திற்கு சுடரேற்று வைபவம் இடம்பெற வேண்டும்.

## 06) பொதுக்கூட்டங்கள்.

பொதுக்கூட்டங்கள் 27 . 11 . 1992 அன்று பி. ப. 4.00 மணிக்கு அணிவகுப்பு நிகழ்ச்சி தொடங்கி அதன்பின் பொதுக் கூட்டம் ஆரம்பித்து முடிவில் கலைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

மேலும் மாவீரர் வாரத்தில் ஒவ்வொரு வட்டத்திற்கும் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு இரவு 7. 30 மணிக்கு தொடங்கி, முடிவில் கலைநிகழ்ச்சியும் இடம்பெறவேண்டும்.

## 07) போட்டிகள்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேச்சுப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், பாட்டுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், சிறுகதைப் போட்டிகள் போன்றவை நடாத்தப்படல் வேண்டும். பாடப்படும் பாடல்கள் யாவும் எமது புரட்சிப் பாடல்களாகவே இருத்தல் வேண்டும். பேச்சுப் போட்டிகள், கவிதைகள் யாவும் மாவீரர்கள் தொடர்பாகவே இருத்தல் வேண்டும். இப் போட்டிகள் யாவும் நவம்பர் 01 ம் திகதிக்கு முன்னர் முடிவுற வேண்டும்.

## 08) வெளியீடுகள்:-

இதுகாலவரை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வந்த எமது மாவீரர்களின் வரலாறுகளை உரிய பொறுப்பு வாய்ந்தவர்கள், தொகுத்துப் புத்தகமாக்கி தமிழீழ மாவீரர் பணிமனை வெளியீடாக, ஒக்டோபர் 1992 க்கிடையில் வெளியிடுதல்.

## 09) மரம்நாட்டுதல்:-

மாவீரர்களின் நினைவாக பயன்தரும் மரவகைகளை நாட்டும் வைபவம் பருவகாலத்தில் இடம் பெற வேண்டும்.

## 10) சுவரொட்டிகள்.

முதலில் மாவீரர் நாள் ஆண்டு திகதியை உள்ளடக்கிய சுவரொட்டிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் அனுசரணையுடன் வெளியிடப்படல் வேண்டும். இச் சுவரொட்டிகள் 10,000 அடிக்கப்படல் வேண்டும். அதன்பின் 5 விதமான 25,000 சுவரொட்டிகள் அடிக்கப்படல் வேண்டும். முதலில் அடிக்கப்படும் சுவரொட்டி எழுச்சிமிக்கதாக இருத்தல் வேண்டும். சுவரொட்டிகள் யாவும் (செப்டெம்பர்) புரட்டாதி மாதத்திற்குள் அடித்து முடிக்கப்படல் வேண்டும். பின்னர் தகுந்த நேரத்தில் விநியோகிக்கப் படவேண்டும்.

## 11) கலை நிகழ்ச்சிகள்:-

## கலை பண்பாட்டுக் கழகம்.

கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக கலை பண்பாட்டுக் கழகத்தினருடன் தொடர்பு கொள்ளவேண்டும். மாவட்டங்கள் தோறும் நடைபெற இருக்கும் கலை நிகழ்ச்சிகளின் தொகை வரையறுக்கப் படல் வேண்டும். இதன்படி,

அ) யாழ் மாவட்டம் – 07 நாடகங்கள்.
03 வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள்.
07 விதமான தெருக் கூத்துக்கள்.

ஆ) ஏனைய மாவட்டங்கள் 03 நாடகங்கள் (ஆகக் குறைந்தது)
01 தெருக்கூத்து (ஆகக்குறைந்தது)
01 வில்லுப்பாட்டு(ஆகக்குறைந்தது)

நாடகங்கள் யாவும் 30 நிமிடங்களுக்கு குறையாமலும், 45 நிமிடங்களுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும். தெருக்கூத்துக்கள், வில்லுப்பாட்டுகளும் 45 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

## 12) கொடி இறக்கம்.

இந்நிகழ்ச்சி 27.11 1992 அன்று மாலை 5.00 மணிக்கு இடம் பெறல் வேண்டும். கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் கலை நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர் தேசியக் கொடி இறக்கப்படல் வேண்டும்.

## 13) வீதிகளுக்குப் பெயர் சூட்டல்.

வீதிகள், மண்டபங்களுக்குப் பெயர் சூட்டல் நிகழ்ச்சிகள் 23. 11. 1992 தொடங்கி 25. 11. 1992 வரையும் இடம்பெற வேண்டும்.

"இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை"

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

நன்றி!

1992 மாவீரர் நாள் குழு.

# இணைப்பு:-

சகல விசேட தளபதிகள், தளபதிகள், அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்கள், சகல பொறுப்பாளர்கட்கும்.

எமது மண்மீட்புப் போரில் தம்முயிரை அர்ப்பணித்துவித்தாகிவிட்ட எம்மாவீரர்களின் வரலாற்றை முழுமைப்படுத்தி, ஆவணப்படுத்திச் சரித்திரமாக்கி, எம் சந்ததிக்கு அர்ப்பணிப்பது எம் தலையாய பணியாக உள்ளது.

இதன் நிமித்தமாக இம் மாவீரர்கள் பெயரில் நடைபெறுகின்ற அனைத்து நிகழ்வுகளும், அமைக்கப்படும் தூபிகள், ஆரம்பிக்கப்படும் நூல் நிலையங்கள், படிப்பகங்கள், பாலர் பாடசாலைகள், சங்கங்கள், கழகங்கள், படங்கள் வைத்தல், வீதிகட்குப் பெயர் சூட்டுதல், மண்டபங்கள் திறத்தல், போட்டிகள் நடாத்துதல், ,கலை நிகழ்வுகள் நடாத்துதல், பத்திரிகை, சஞ்சிகைகள், பாடல் படநாடாக்கள் வெளியிடுதல், அஞ்சலிக்கூட்ட நிகழ்வுகள், அழைப்பிதழ்கள் அடித்தல் போன்ற இன்னோரன்ன மாவீரர் சம்பந்தமான நிகழ்வுகட்கு, எம்மையும் கலந்து எம்மிடம் ஆலோசனை பெற்றுச் செய்வதுடன், அதற்குரிய ஆவணச்சான்றுகளை எமக்குத் தந்துதவுதலும் சாலச் சிறந்ததாகும்.

எமது தொடர்பகங்கள், பொது ஸ்தாபனங்கள், சன சமூக நிலையங்கள் போன்றவை மேற்கொள்ளும் மாவீரர் சம்பந்தமான நிகழ்வுகட்கும் சகல அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் முன்னின்று வழிகாட்டி நெறிப்படுத்துவதுடன், எமது பணிமனையின் ஆலோசனைகளையும், ஒத்துழைப்புகளையும் பெறுமாறு உதவுதல் வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

பொறுப்பாளர்,<br>
தமிழீழ மாவீரர் பணிமனை,<br>
தமிழீழம்.

# "எங்கள் தேசியக் கொடியிது"

(திரு. புதுவை இரத்தினதுரை)

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்ந்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி - புலி
காட்டிய பாதையில் சென்றகொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது (ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது - தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏந்திய கொடியிது (ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்துவிழுத்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசியக் கொடியிது. (ஏறுதுபார்)

## மாவீரரான
## கரும்புலிகள்

05-07-87 நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது

**கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன்)**
துன்னாலை தெற்கு, பருத்தித்துறை.

10-07-90 வல்வைக் கடலில் சிறிலங்கா கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது

**மேஜர் காந்தரூபன்**
**(யோகராசா கோணேஸ்வரன்)**
குச்சம் ஒழுங்கை, ரேவடி, வல்வை.

**கப்டன் கொலின்ஸ் (பர்ணாந்து சில்வஸ்ரர்)**
நறுவிலிக்குளம், மன்னார்.

**கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை திலகராசா)**
திலகராசா வீதி, காட்டு வளவு, வல்வை.

23-11-90 - மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது

**லெப். கேணல் போர்க்**
**(மாப்பாணபிள்ளை அரசரத்தினம்)**
ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை, வவுனியா.

19-03-91 - சிலாவத்துறை, சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலில்

**மேஜர் டாம்போ (காசிப்பிள்ளை தயாபரன்)**
நாச்சிக்குடாச் சந்தி, மன்னார்.

04-05-91 - பருத்தித்துறைக் கடலில் சிறிலங்கா கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலில்

**கப்டன் ஜெயந்தன் (சம்புக்குட்டி பத்மநாதன்)**
மாரியம்மன் கோவிலடி, சோதிபுரம், ஏறாவூர்.

**கப்டன் சிதம்பரம் (பெரியதம்பி சந்திரன்)**
நடராசா வீதி, வல்வெட்டித்துறை.



தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.